**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-6 Date : 30.10.2025
Case No. : **O.S. 118/2020** Nationality : Indian
Name : கணேசன் Religion :
Father's/Husband's Name : கோவிந்தராசு Age : 59
Village :
Taluk :

வா.சா.6

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு** குறுக்கு விசாரணை,

நான் சேலத்தில் உள்ள லட்சுமி ஸ்வீட் கடையில் கேசியராக பணிபுரிந்து வருகிறேன். எனது மனைவி குழந்தைகள் சீர்காழியில் வசித்து வருகிறார்கள். நாங்கள் சீர்காழியில் வசிக்கவில்லை எனது மனைவி குழந்தைகள் மட்டும் நான் திருமணம் ஆனதிலிருந்தே சீர்காழியில் வசித்து வருகிறார்கள். நான் என் மனைவி குழந்தைகளுடன் சேர்ந்துதான் வாழ்ந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி 20 ஆண்டுகள் ஆகிறது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள முகவரியில் வசித்து குழந்தைகளின் படிப்பிற்காக சீர்காழிக்கு சென்று விட்டோம். நான் மேற்படி முகவரியில் வசிக்கவில்லை என்றாலும் தவறான முகவரி கொடுத்து பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சேலத்தில் வேலை பார்ப்பதற்கு முன்பாக கீழ்மாந்தூரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நகை மதிப்பீட்டாளராக வேலை பார்த்தேன். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எனக்கு எதிராக குற்றச் சாட்டு கூறி என்னை இடைக்கால பணி நீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான் அதனால் நான் பணி வேண்டாம் என்று

கூறிவிட்டேன். மேற்படி வழக்கு கும்பகோணம் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலம் எப்போது யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார். தாவா சொத்து என்றால் பூர்வீக சொத்து. சர்வே எண்.172/1 ன் விஸ்தீரணம் 15 ஏர்ஸ் ஆகும். மேற்படி சொத்து கோவிந்தராஜ் பத்தர் எனது தகப்பனார், நடேச பத்தர், வெங்கட்ராம பத்தர், எனது தாத்தா சக்கரபாணி பத்தர் ஆகியோர் பெயரில் தலா 12 செண்ட் உள்ளது. நடேச பத்தருக்கு சொந்தமான இடத்தில் பிரம்பாயி அம்மன் கோவிலை கட்டி கொடுத்துள்ளார்கள். அதை நாங்கள் பராமரித்து வருகிறோம். வெங்கட்ராம பத்தர், குப்புசாமி பத்தர் ஆகிய இருவரும் பங்காளிகள். குப்புசாமிக்கு தனியாக இடம் இல்லை. குப்புசாமி பத்தரின் மனைவி பெயர் சரஸ்வதி அம்மாள், குப்புசாமி பத்தரின் மகன் வைத்தியநாத பத்தர், வைத்தியநாத பத்தரின் மகள் பாண்டியன் நாயகி (எ) கோமதி, மேற்படி கோமதி இந்த வழக்கின் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான். சரஸ்வதி அம்மாள் எப்போது எவ்வளவு விஸ்தீரணம் சொத்து கிரயம் பெற்றார் என்றால் கிரயம் பெற்ற தேதி தெரியாது 12 செண்ட் கிரயம் வாங்கினார். மேற்படி கிரய ஆவணத்தை நான் பார்த்ததில்லை. வழக்கு தாக்கல் செய்துள்ள சரோஜாவின் மாமியார் காசியம்மாள் சரஸ்வதி அம்மாள் கிரயம் பெற்ற சொத்தில் பேர் பாதி கிரயம் பெற்றார் என்றால் சரிதான். சரஸ்வதி அம்மாளுக்கு சொந்தமான கிரயம் கொடுத்தது போக மீதமுள்ள சொத்தை அவருடைய மகன் வைத்தியநாத பத்தர் அனுபவித்து அவரது மகள் கோமதிக்கு கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து கோமதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. ரங்கநாதனுடன் பிறந்தவர்கள் 3 நபர்கள். ரங்கநாதனின் வாரிசுகள் மனைவி சரோஜா, மகள்கள் மல்லிகா, சாந்தி, ஜெயா ஆகியோர்கள். வாதியின் கணவர் ரங்கநாதன் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் ரங்கநாதனுக்கு கிடைத்தது என்றால் எனக்கு விவரம்

தெரிந்த நாளில் இருந்து பூர்வீகமாக அனுபவித்து வருகிறார். காசியம்மாளுக்கு முருகேசன், பக்கிரிசாமி, ரங்கநாதன் ஆகியோர் மற்றும் பெண் வாரிசு ஆபூர்வம், கனகம், ராமு அம்மாள் மற்றும் ஒருவர் உண்டு. காசியம்மாளின் வாரிசு சான்றை நான் பார்த்தேனா என்றால் இல்லை. காசியம்மாளின் வாரிசுகளான ரங்கநாதனை தவிர மற்ற அனைவரும் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் கோமதிக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு எண் நினைவில்லை. நான் கோமதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணையில் உள்ளது. மேற்படி தாவா சொத்து பிரதிவாதி பெயரில் உள்ள விவரத்தை தெரிந்து கொண்டு தாவா சொத்தை அபகரிக்க எண்ணி நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeshwari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur(FAC).